**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

**CC No.48/2022 Date:30-01-2024**

அ.சா.3 – ராதா, க/பெ.சரவணன்,

**(சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை).**

**(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்).**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-

1) இரண்டு எதிரிகளும் எனக்கு பங்காளி உறவுமுறை என்றால் சரிதான். எங்களுக்கும், எதிரிகளுக்கும் நிலம் சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றும், அது சம்பந்தமாக சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். எங்களது வீட்டிற்கும், எதிரிகளின் வீட்டிற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 500 மீட்டர் துாரம் இருக்கும். எதிரிகளுக்கு எனது வீட்டிற்கு அருகே சொந்தமான நிலம் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு வடக்கே 10 செண்ட் நிலமும், கிழக்கே 10 செண்ட் நிலமும் வேண்டும் என எதிரிகளிடம் பஞ்சாயத்தில் கேட்டோம் என்றால் அவர்கள் இடத்தை கேட்கவில்லை, என் இடத்தை தான் கேட்டேன்.

2) நான் சொல்வது பொய் என்றும், அவர்களின் நிலத்தை கேட்டு கொடுக்காததால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடம் பட்டா நிலம் என்றால் சரிதான். எனது அண்ணன் கொண்டலாம்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக உள்ளார் என்றால் சரிதான். சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் 1 மணி நேரம் நடந்தது. சம்பவத்தின்போது நான் வீட்டிற்குள் தான் இருந்தேன் என்றால் எனது மகள்களை அடிக்கும்போது நான் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன். நான் காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் காலை 11.00 மணிக்கு சென்றிருப்பேன். சம்பவத்தை எத்தனை நபர்கள் பார்த்திருப்பார்கள் எஎன்றால் சுமார் 1000 நபர்கள் இருந்திருப்பார்கள்.

3) சம்பவ இடத்திற்கு அருகே யார் யார் இருந்தார்கள் என்றால் நான், எனது இரண்டு மகள்கள் மற்றும் எனது மாமியார் கோவிந்தம்மாள் ஆகியோர் இருந்தனர். எனது கணவரும், எனது மகளும் ஆளும் கட்சியில் பொறுப்பில் உள்ளனர் என்றால் எனது மகள் பொறுப்பில் உள்ளார், எனது கணவர் உறுப்பினராக உள்ளார். சம்பவத்தின்போது எனது மகள்களுக்கு ரத்த காயம் ஏற்பட்டிருந்ததா என்றால் முட்டியில் ரத்த காயம் ஏற்பட்டிருந்தது. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், எனது அண்ணன் காவல் உதவி ஆய்வாளராக இருப்பதினால் அதனை பயன்படுத்தி உரிமையியல் வழக்கை எங்களுக்கு சார்பாக முடிக்க எதிரிகளுக்கு எதிராக பொய் வழக்கு கொடுத்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல.

4) எதிரிகள் இருவரும் சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் உள்ளனர் என்றும், அதனால் மகள்கள் முறையான எனது மகள்களை அடிக்க மாட்டார்கள் என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது கணவர் சம்பவத்தின்போது எங்கிருந்தார் என்றால் நிலத்தினை உழவு செய்ய சென்றுவிட்டார்.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.

Witness (Sd)-Radha

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.